இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 30-07-2024

# மோசடியை ஒப்புக்கொண்டார்கள்

'நீட்' தேர்வே மோசடியானதுதான் என்பதை இதுவரை நாம் சொல்லி வந்தோம். இப்போது, அந்தத் தேர்வு நடத்துபவர்களே அதை ஒப்புக் கொண்டு விட்டார்கள்!

**720 மதிப்பெண்ணுக்கு 720 மதிப்பெண்ணை 61 பேர் பெற்றதாக அறிவிக்கப்பட்டது முதலில். திருத்தப்பட்ட இறுதி முடிவுகளின்படி இப்போது இந்த எண்ணிக்கை 17 ஆக குறைந்துவிட்டது. உச்சநீதி மன்றத்தில் வழக்கு போடாமல் போயிருந்தால் என்ன நடந்திருக்கும்? மோசடியாக மதிப்பெண் பெற்றவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந் திருப்பார்கள்.**

**இன்னொன்றையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த ஆண்டு நீதி மன்றம் விசாரணை நடத்தியதால் இந்த மோசடி ஓரளவு தடுக்கப்பட்டுள் ளது. இத்தனை ஆண்டுகளாக நடந்த தேர்வில் எத்தனை மோசடிகள் நடந் துள்ளதோ? தேர்வு நடத்தியவர்களின் மனசாட்சிக்குத்தான் தெரியும். உச்சநீதிமன்றத்தின் கிடுக்குப் பிடியில் தப்ப முடியாமல், தாங்கள் செய்த மோசடியை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டது தேசியத் தேர்வுகள் முகமை.**

தேர்வுகளை முறைப்படுத்துவதுதான் இதுபோன்ற முகமைகளின் பணியாக இருக்க, மோசடிகளைச் செய்வதும், அதை மறைப்பதும் தான் தேசியத் தேர்வுகள் முகமையின் பணியாக இருந்துள்ளதை இந்த ஆண்டு முழுமையாக இந்திய நாடு அறிந்தது.

மே மாதம் 5 ஆம் தேதி நடைபெற்ற 'நீட்' தேர்வில் 23.33 லட்சம் மாணவ, மாணவியர் இந்தியா முழுவதும் எழுதினார்கள். தேர்வு நடந்த நாளின் போதே வினாத்தாள் கசிந்தது. உத்தரப்பிரதேச தேர்வு மையத்தில் தேர்வு தொடங்கும் முன் வினாத்தாள் சமூக வலைதளத் தில் கசிந்தது. அரியானாவிலும் இதே போன்று நடந்தது. பீகாரிலும், ஜார்கண்ட் மாநிலத்திலும் இதே போல் வினாத்தாள் கசிந்தது. ஆனால் அதைப் பற்றி தேர்வு முகமை கவலைப்படவில்லை. உடனடியாக இந்தத் தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அடுத்த மோசடியை கருணை மதிப்பெண் என்ற பெயரால் அரங் கேற்றியது தேசியத் தேர்வு முகமை. 1500 பேருக்கு கருணை மதிப் பெண் வழங்கி இருக்கிறார்கள். இவர்களுக்கு மறுதேர்வு நடத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. மறுதேர்வுக்கு பலபேர் வரவில்லை. எழுதி யவர்கள் முடிவிலும் முன்பு போல் இல்லை. அரியானா மாநில மையத் தில் 6 பேர் முதலில் நடந்த தேர்வில் முதலிடம் பெற்றிருந்தார்கள். மறுதேர்வில் இவர்கள் 6 பேரும் முதலிடம் பெறவில்லை.

**தேர்வு முடிவுகள் வந்தது. அரியானாவில் ஒரே தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய 6 பேர் 720க்கு 720 மதிப்பெண்ணை எடுத்தார்கள். இது அடுத்த அதிர்ச்சியாகும்.**

**இதுவரை இல்லாத வகையில் 67 பேர் 720க்கு 720 எடுத்தார்கள். இது அடுத்த பேரதிர்ச்சியாகும்.**

**இயற்பியல் வினாத்தாளில் குழப்பம் என்று சொல்லி 44 பேருக்கு கூடுதல் மதிப்பெண் போட்டிருந்தார்கள். அதுவும் உச்சநீதிமன்ற விசாரணையில் ரத்தாகி விட்டது.**

இவ்வளவும் உச்சநீதிமன்ற விசாரணை மூலமாக வெளியில் வந்தவை. விசாரணையின் போது தேசியத் தேர்வு முகமை ஒப்புக் கொண்ட பின்னால் வெளிச்சத்துக்கு வந்த முறைகேடுகள். எந்தத் தவறுமே நடக்கவில்லை என்று இதுவரை சாதித்தது தேசியத் தேர்வு முகமை.

தேசியத் தேர்வு முகமை ஒரு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. "மே 5 ஆம் தேதி நடத்தப்பட்ட 'நீட்' தேர்வு எந்தவித சட்ட விரோத நடவடிக்கைக்கும் இடமளிக்காமல் நேர்மையாக நடத்தப் பட்டது. இத்தேர்வில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளதாக தெரி விக்கப்படும் புகாருக்கு ஆதாரமில்லை" என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்று உச்சநீதிமன்றம் சொன்னதும் ஒவ்வொரு குற்றமாகத் திருத்தப்படுகிறதே? இப்போது மட்டும் எப்படி ஒப்புக் கொள்கிறார்கள்.

'நீட்' தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும். 'நீட்' தேர்வை உச்ச நீதிமன்றம் ரத்து செய்யவில்லையே தவிர, குற்றம் நடந்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளது. **"நீட் தேர்வு வினாத்தாள்கள் ஹசாரிபாக், பாட்னாவில் கசிந்திருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. 'நீட்' வினாத்தாள் கசிவால் 155 மாணவர்கள் பலனடைந்திருக்கிறார்கள் என்பது சி.பி.ஐ. விசாரணை மூலம் தெரிய வருகிறது"** என்பதை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, தேர்வில் மோசடி நடந்துள்ளது என்பது உச்சநீதிமன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். அவர்கள் சொன்னபடி தேர்வு முகமையும் நடந்து பலரை தகுதி நீக்கம் செய்திருப்பதும், மோசடியை ஒப்புக்கொண்ட தன்மையே ஆகும்.

இந்த மோசடித்தனங்கள் அனைத்தும் வட மாநிலங்களில் மட்டும் திட்டமிட்டு அரங்கேற்ற அனுமதிக்கப்படுகின்றன. இதற்குப் பின்னால் இருக்கும் சூட்சுமம் என்ன? காது கம்மலைக் கழற்று, தாலி அணிந் திருந்தால் அதையும் கழற்று என்கிற அளவுக்கு தமிழ்நாட்டு தேர்வர் களை கொடுமைப்படுத்துகிறார்கள். ஆனால் வட மாநிலங்களில் ஆள் மாறாட்டம் செய்யவே அனுமதிகள் எளிதில் தரப்படுகின்றன. வினாத் தாள்கள் வட மாநிலங்களில் முன்கூட்டியே பரப்பப்படுகிறது. தமிழ்நாட் டில் ஏன் லீக் செய்யப்படுவது இல்லை?

**குஜராத், ராஜஸ்தான், அரியானா மாநிலங்களில் இருப்பவர்கள் வசதிக்காகத்தான் இந்தத் தேர்வுகள் திட்டமிடப்படுகிறதா என்ற சந்தேகம் இயல்பாக வருகிறது. மோசடித்தனங்கள் முழுக்க அம்பலம் ஆனபிறகும் 'நீட்' தேர்வை ஒன்றிய பா.ஜ.க. அரசு ரத்து செய்யாமல் இருக்கும் பின்னணியில் மாபெரும் சதி இருக்கிறது என்பதே உண்மை. முழு உண்மை.**

---

பாரீஸ் ஒலிம்பிக்:

## டேபிள் டென்னிஸ் முதல் சுற்றில் மனிகா பத்ரா வெற்றி!

பாரீஸ், ஜூலை 30–

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம் பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் மொத்தம் 200க்கும் மேற்பட்ட நாடு களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனை கள் பங்கேற்றனர்.

பேட்மிண்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து முதல் சுற்றில் வென்றார். பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் தகுதிச் சுற்றில் இந்தியா வின் ரமிதா ஜிண்டால் வென்றார்.

துப்பாக்கி சுடுதல் 10 மீ ஏர் ரைபிள் இறுதிச்சுற்றில் இந்திய வீராங்கனை மானு பாகெர் வெண்கலம் வென்று அசத்தினார்.

இந்நிலையில், டேபிள் டென்னிஸ் பிரிவின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மனிகா பத்ரா, கிரேட் பிரிட்ட னின் அன்னா ஹர்சியுடன் மோதினார். இதில் பத்ரா 41 என்ற புள்ளிக் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறி னார்.

---




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.7.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருநங்கைகளின் நலனிற்காக சிறப்பான முறையில் சேவை புரிந்ததற்கான 2024–ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதினை கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி அவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி. வே.அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இணைச் செயலாளர் திருமதி ச.வளர்மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பான சேவை: 2024-–ஆம் ஆண்டிற்கான

## சிறந்த திருநங்கைக்கு ரூ.1 லட்சம் - விருது!

### குமரி மாவட்டத்தைச் சேர்ந்த சந்தியாதேவிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 30 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.7.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருநங்கை களின் நலனிற்காக சிறப்பான முறையில் சேவை புரிந்ததற்கான 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதினை கன்னியா குமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி அவர் களுக்கு வழங்கினார்கள்.

**திருநங்கையர்களின் நலன் காத்திட கழக அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள்**

மூன்றாம் பாலினத்தவர் என்ற பெயருக்கு மாற்றாக அவர்களின் சுயமரியாதையை காக்கும் வகை யில் "திருநங்கை" என்ற பெய ரினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். திருநங்கைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார ஆதரவை வழங்கி அவர்களுக்கான நலத்திட் டங்களை செயல்படுத்திட 2008ஆம் ஆண்டு முத்த மிழறிஞர் கலைஞர் அவர் கள் தமிழ்நாடு திருநங்கை கள் நல வாரியத்தை தோற்றுவித்தார்.

அந்நலவாரியத்தின் வாயிலாக அவர்களுக்கு உயர்கல்விக்கான உதவித் தொகை, தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சுயதொழில் புரிந்திட மானி யம், 40 வயதிற்கு மேற் பட்ட ஆதரவற்ற திருநங்கை களுக்கு ரூ.1,500/ மாதாந் திர ஓய்வூதியத் தொகை, திருநங்கைகள் உயர்கல்வி பயின்றிட கல்வி கனவுத் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

கழக அரசு பொறுப் பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை 9080 திரு நங்கைகளுக்கு நலவாரி யத்தின் மூலமாக அடை யாள அட்டை வழங்கப்பட் டுள்ளதோடு, 617 திருநங்கை களுக்கு சுயதொழில் புரிய மானியமும், 1599 ஆதர வற்ற திருநங்கைகளுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், கட்டணமில்லா பேருந்து பயண திட்டமான விடியல் பயணத் திட்டத்தில் திருநங் கைகள் 29.74 இலட்சம் கட்டணமில்லா பேருந்து பயணம் மேற்கொண்டுள் ளனர்.

**சிறந்த திருநங்கை விருது**

திருநங்கைகளின் நல னிற்காக சிறப்பான முறை யில் சேவைபுரிந்து, அவர் களுள் முன்மாதிரியாக திகழும் திருநங்கை ஒரு வர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமை யில் அமைக்கப்பட்டுள்ள குழுவால் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் திருநங்கை கள் தின மான ஏப்ரல் 15ஆம் நாளில் அவர் களை சிறப்பிக்கும் பொருட்டு, சிறந்த திருநங்கை விருது கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தமிழ் நாடு அரசால் வழங்கப்பட்டு வருகி றது. இவ்விருதிற்கு தேர்ந்தெடுக்கப் படும் திருநங்கைக்கு 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப் படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையைச் சேர்ந்த திரு நங்கை சந்தியா தேவி அவர்கள் பூ கட்டும் தொழில் செய்து தன் வாழ்க்கையை நடத்தி வருகிறார். வில்லிசையில் ஆர்வம் ஏற்பட்டு புராணக் கதைகளை படித்து தன் தனித் திறமையால் 1000க்கும் மேற்பட்ட வில்லிசை நிகழ்ச்சிகளை தமிழ்நாடு மற்றும் கேரளாவில் நடத்தியுள்ளார். வில்லிசை நிகழ்ச்சி மூலம் கொரோனா விழிப்புணர்வு, சமூக நலத் திட்டங்கள், வரதட் சணை தடுப்பு, பெண்கள் வன்கொ டுமை தடுப்பு சட்டம் போன்ற விழிப் புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். பல திருநங்கைகளுக்கு அவர்கள் சுயமாக வருமானம் ஈட் டும் வகையில் வில்லிசையை கற் றுக் கொடுத்து கிராமிய கலைகளில் ஈடுபட உதவி வருகிறார். தோவா ளையைச் சார்ந்த 9ம் வகுப்பு படிக் கும் ஒரு ஏழை சிறுவனின் படிப்பிற் கான அனைத்து செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதோடு, 8 வயது மனவளர்ச்சி குன்றிய ஒரு குழந்தையை தத்தெடுத்து பராமரித்து வருகிறார்.

இவ்வாறு, திருநங்கைகள் சமூ கத்திற்கு முன்மாதிரியாக திகழ்ந்து, திருநங்கைகளின் முன்னேற்றத் திற்காக வில்லிசையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி சேவை புரிந்து வரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதிற்கு தேர்வு செய்யப்பட்டார். அவரது சேவையைப் பாராட்டி, முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம், திருநங்கை சந்தியா தேவி அவர்களுக்கு சிறந்த திருநங்கை விருது, 1 இலட்சம் ரூபாய் காசோலை மற்றும் பாராட்டுச் சான் றிழை வழங்கி பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி வே.அமுத வல்லி, சமூக நலன் மற்றும் மக ளிர் உரிமைத் துறை இணைச் செயலாளர் திருமதி ச.வளர்மதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---



தி.மு.க.

இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 3, 4, மற்றும் 8 ஆகியவற்றுக்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில், கீழ்க்கண்ட இடத்தில் நடைபெறவிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 30/07/2024 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | 3, 4 மற்றும் 8 | ஸ்ரீ குமரன் மஹால், பெங்களூரு–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை, குந்தாரப்பள்ளி கூட் ரோடு, கிருஷ்ணகிரி மாவட்டம். |

அந்தந்த மண்டலங்களைச் சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 27–07–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி